மக்களுக்குத் தெளிவாக அறிவிக்க வேண்டும். சுற்றுச்சூழல் மாசினைத் தடுத்து நிறுத்துவதற்கு ஓர் உயர்நிலைக் குழுவை அமைப்பதற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்வரவேண்டுமென்று இந்த நேரத்திலே என்னுடைய கருத்தைப் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, அந்தச் சுற்றுச்சூழல் கெட்டுப்போகாமல் இருப்பதற்காக, இந்த அரசு எல்லா முயற்சிகளிலும் ஈடுபட்டு விடை காணும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. தகவல் கோரல்

(அ) திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணையைப் பாசனத்திற்காகத் திறத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை.

***திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகாவில் உள்ள மணிமுத்தாறு அணையில், 86 அடி தண்ணீர் இருப்பதால், 80 அடிக்கு மேலுள்ள 6 அடி தண்ணீர்மட்டுமே, சேரன்மகாதேவி தொகுதிக்குட்பட்ட மணிமுத்தாறு பிரதானக் கால்வாயில் முதல் reach குளங்களுக்கு விவசாயத்திற்கு உடனடியாகத் திறந்துவிட்டு, வாடும் பயிர்களைக் காப்பாற்றுவதற்கான அவசியம் குறித்து அரசின் கவனத்தை ஈர்ப்பதோடு, விவசாயிகளைப்பற்றி நன்கு அறிந்த நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து நல்ல பதிலை எதிர்பார்க்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேல்துரையினுடைய கோரிக்கை எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. காரணம், மணிமுத்தாறினுடைய பாசன

முறை, மாண்புமிகு உறுப்பினருக்கு நன்கு தெரியும்; தங்களுக்கும் தெரியும். 80 அடி வரையிலே பிரதானக் கால்வாயிலே தண்ணீர் போகாது; அதற்கு மேலேதான் தண்ணீர் எடுக்கலாம். இப்போது 85 அடி தண்ணீர் அங்கிருக்கிறது. ஆனால், மணிமுத்தாறினுடைய பாசன முறை என்ன? நவம்பர் மாதம் 1 ஆம் தேதி திறக்க வேண்டும், dam-ஐ; மார்ச் 31 ஆம் தேதி மூட வேண்டும். ஆனால், இந்த ஆண்டு அபரிமிதமான மழை பொழிந்த காரணத்தால்—reach முறையிலே கொடுப்போம், first reach, second, third reach என்று—ஆனால், இந்த வருடம், இந்த முறை கலைஞருடைய அரசு, நிறைய தண்ணீர் இருக்கிற காரணத்தினால், கிட்டத்தட்ட 125 நாட்களுக்கு மேலாக நான்கு reach-களுக்கும் தண்ணீர் கொடுத்தது. அதிலே, first preference, முதல் இரண்டு reach-களுக்கு; அதுவும் உங்களுக்குக் கொடுத்தோம். கிட்டத்தட்ட 170, 180 குளங்களுக்கு வந்திருக்கும், 1,200 ஏக்கர் பாசனத்திற்குக் கொடுத்தோம். இதுவும் போதவில்லையென்று, 80 அடிக்கு மேலே 5 அடி தண்ணீர் இருக்கிறது அதையும் திறந்துவிடுங்கள் என்று கேட்கிறீர்களே, என்ன நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை. இதைத் திறந்தாலும் என்ன நடக்கப் போகிறது உங்களுக்கு? 6,000 ஏக்கர் பாசனத்திலே, standing crops இருக்கிறது என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். இதுகுறித்து நான், இன்றைக்கு மாலைக்குள் கலெக்டருடைய கருத்துருவைக் கேட்கிறேன். உள்ளபடியே தேவை என்று கருதினால், கலைஞருடைய அரசு, பயிர் வாடுவதற்கு அனுமதிக்காது. கலெக்டருடைய கருத்துரு கேட்ட பிறகு, மாலைக்குள் இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு) திரு. வேல்துரை, எல்லாம் சொல்லிவிட்டார்கள், உட்காருங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், தமிழகத்தில் எந்தெந்தக் குடும்பங்களுக்குக் குடும்ப அட்டை இல்லையோ, அவர்கள் எல்லாம் மனு செய்தால், குடும்ப அட்டை வழங்கப்படும் என்று இந்த அவையிலேயே அறிவித்து, குடும்பக் கார்டு இல்லாதவர்கள் எல்லாம் இப்போது அதற்கான மனுக்களையெல்லாம் செய்து, அந்தக் கார்டுகளுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். சில இடங்களிலே கார்டுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.